# ஸ்ரீ வித்யபாரதி
# மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,

சக்கராம்பாளையம், அகரம் (PO),எலச்சிப்பாளையம்
திருச்செங்கோடு (TK) நாமக்கல்(DT) 637202.
Cell :99655-31727, 94432-31727


## மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு, மார்ச் - 2023
## TENTATIVE ANSWER KEY (14.03.2023)

வகுப்பு – 11 - பொதுத்தமிழ்

கால அளவு :3.00 மணி நேரம் மதிப்பெண் :90

| வ.எண் | விடை | மதிப்பெண் | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| | பகுதி - I | | |
| | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | | 14x1=14 |
| 1. | ஈ) பனுவல் | 1 | 14 |
| 2. | ஈ) அண்ணாமலையார் | 1 | |
| 3. | ஈ) இவை மூன்றும் | 1 | |
| 4. | இ) பகுதி, விகுதி | 1 | |
| 5. | அ) 27 | 1 | |
| 6. | ஆ) நிரையொன்றாசிரியத் தளை | 1 | |
| 7. | ஆ) சாழல் | 1 | |
| 8. | அ) அமைச்சர், மன்னரிடம் | 1 | |
| 9. | இ) ஆசிரியர் | 1 | |
| 10. | ஈ) மனோன்மணீயம் | 1 | |
| 11. | இ) பிறருடன் ஒத்துப்போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன் | 1 | |
| 12. | ஈ) தண்டை | 1 | |
| 13. | ஆ) இளையராஜா | 1 | |
| 14. | அ) (1) – (iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i) | 1 | |
| | பகுதி - II<br>பிரிவு - 1<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | | **3x2=6** |
| 15. | **இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வை:**<br>❖ தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை என, இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் குறிப்பிடுகிறார். | 2 | 2 |

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 16. | **சீர்தூக்கி ஆராயவேண்டிய ஆற்றல்கள்:**<br>❖ தான் செய்யக் கருதிய செயலின் வலிமை,<br>❖ அதைச் செய்ய விரும்பும் தன் வலிமை,<br>❖ அதற்கு ஊறு செய்து விலக்கக்கூடிய பகைவனது வலிமை,<br>❖ தனக்குத் துணையாவார்,<br>❖ பகைவர்க்குத் துணையாவார் வலிமை ஆகியனவாம். | ½<br>½<br>½<br>½ | 2 |
| 17. | ❖ எண்ணச் சொல்கிறவர் - ஆசிரியர்<br>❖ எண்ணுபவர்கள் - மாணவர்கள் | 1<br>1 | 2 |
| 18. | **செந்தூக்கு:**<br>❖ தூக்கு என்பது செய்யுள் அடிகளை வரையறை செய்வதாகும். செந்தூக்கு என்பது வஞ்சிப்பாவின் இறுதியடி போன்றோ, ஆசிரியவடியின் இறுதி போன்றோ அமையும். | 2 | 2 |
| | **பிரிவு - 2**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x2=4** |
| 19. | **தமிழ்நாட்டின் மாநில மரம் :**<br>❖ தமிழ்நாட்டின் மாநில மரம், பனை மரம்.<br>❖ அது சிறந்த காற்றுத் தடுப்பான்.<br>❖ அது நிலத்தடி நீர்மட்டம் குறையாது காக்கும்.<br>❖ அம்மரத்திலிருந்து பதநீர், நுங்கு முதலியன கிட்டுகின்றன.<br>❖ அவற்றைக்கொண்டு கருப்பட்டி, பனங்கற்கண்டு தயாரிக்கப்படுகின்றன. | ½<br>½<br>½<br>½ | 2 |
| 20. | **நாட்டுப்புறம்:**<br>❖ நாட்டுப்புறத்தில் எல்லாவற்றையும் விழுங்க வல்ல மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது.<br>**பட்டணம்:**<br>❖ பட்டணத்திலோ மனித சமுதாயந்தான் மிகவும் முக்கியமானதாய்த் தலைதூக்கி நிற்கிறது என்கிறார், தாகூர்.<br>❖ அங்கே மனிதனுடைய கொடூரமான தன்மை வெளிப்படுகிறது. தன் சுகதுக்கத்திற்கு முன் மற்ற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றி மனிதன் எண்ணுவதுகூட இல்லை. | 1<br>1 | 2 |
| 21. | **இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் :**<br>❖ **நாகரம், வேசரம், திராவிடம்** என்பன ஆகும்.<br>❖ தஞ்சைபெரிய கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைபாணியாகும். | 1<br>1 | 2 |
| | **பிரிவு - 3**<br>**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** | | **7x2=14** |
| 22. | **உயிரீறு:**<br>நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்க வடிவம் உயிர் என்பதால் அது "உயிரீறு" எனப்படும்.<br>**எ.கா.** மணி[ண் + இ] மாலை = மணிமாலை – உயிரீறு<br>**மெய்யீறு:**<br>நிலைமொழியின் இறுதிய எழுத்து மெய்யாக இருந்தால் அது 'மெய்யீறு' எனப்படும்<br>**எ.கா:** பொன் + வண்டு = பொன்வண்டு – மெய்யீறு. | 1<br>1 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 23. | **அ) அலர்ந்து - அலர் + த்(ந்) + த் + உ**<br>அலர் - பகுதி<br>த் - சந்தி, ந் ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி<br>**ஆ) நெருங்கின - நெருங்கு + (இ)ன் + அ**<br>நெருங்கு - பகுதி<br>(இ)ன் - இறந்தகால இடைநிலை<br>அ - பெயரெச்ச விகுதி | 1<br>1<br>1<br>1 | 2 |
| 24. | **அ) இழுக்கின்றி = இழுக்கு + இன்றி**<br>விதி 1: உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்<br>விதி 2: உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே<br>**ஆ) திருப்புகழ் = திரு + புகழ்**<br>**விதி** : இயல்பினும் விதியிலும் நின்ற உயிர்முன் கசதப மிகும் - திருப்புகழ் | 1<br>1<br>1<br>1 | 2 |
| 25. | அ) பழம் **தின்று** பால் **பருகினான்.**<br>ஆ) காகம் **கரைய** மயில் **அகவியது.** | 1<br>1 | 2 |
| 26. | உலை, உளை, உழை<br>மன **உளைச்சல்** தீரவும் வீட்டில் **உலை** கொதிக்கவும் **உழைக்க** வேண்டும்.<br>**(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 | 2 |
| 27. | அ) தாமரை**த்** தடாகத்தில் மீன்கள் துள்ளி**ப்** பாய்ந்தது.<br>ஆ) ஆண்களை**ப்** போலவே பெண்களும் அரசு**ப்**பணியை**ப்** பெறவேண்டும். | 1<br>1 | 2 |
| 28. | **கலைச்சொல்லாக்கம் :**<br>❖ பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையான இடத்தில் புதிதாகச் சொற்களை உருவாக்கியும் தருவது கலைச்சொல்லாக்கம் ஆகும்.<br>❖ எடுத்துக்காட்டாக cell phone என்னும் ஆங்கிலச்சொல்லிற்குக் கைபேசி, செல்லிடப்பேசி, அலைபேசி போன்ற சொற்கள் உருவாக்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன. | 1<br>1 | 2 |
| 29. | அ) மயில் ஓர் அழகான பறவை.<br>ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும். | 1<br>1 | 2 |
| 30. | **கால்நடை** - கால்நடைகளை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிக் கொண்டு போனார்கள்.<br>**கால் நடை** - சிறிய தொலைவைக் கடக்கக் கால் நடையாகச் செல்வது உடலுக்கு நலம் பயக்கும்.<br>**(அல்லது)**<br>**பிண்ணாக்கு** - மாடுகள் தவிடு, பிண்ணாக்கு ஆகியவற்றை உட்கொண்டு 'கொழுகொழு' என்றுள்ளன.<br>**பிள்நாக்கு(பிளவுபட்ட நாக்கு)** - பாம்பின் நாக்கு பிள்நாக்கு ஆகும்.<br>**(பொருத்தமான தொடர் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br>1<br>1 | 2 |

| | பகுதி – III<br>பிரிவு - 1<br>எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. | | 2x4=8 |
|---|---|---|---|
| 31. | **சு. வில்வரத்தினம் "பாடத்தான் வேண்டும்" என எவற்றைக் குறிப்பிடுகிறார்?**<br>❖ தாய் தன் மக்கள் நலமோடு வாழவேண்டுமெனச் செல்வங்களை வாரி வழங்குவாள். அது போலத் தமிழ்த்தாய் தலைமுறை தலைமுறையாய்த் தன் திருவடிகளைத் தொழுத தமிழ்ப்பற்றாளர்.<br>❖ தமிழ் வயலினை ஆழ அறிவால் உழுதவர்,<br>❖ பயனளிக்கும் நல்ல கருத்துகளைத் தமிழ்நிலத்தில் ஊன்றுமாறு செய்தவர்,<br>❖ காலம் நேரம் கருதாது தமிழ்ப்பயிர் தழைத்தோங்க வியர்வை சிந்த உழைத்தவர் ஆகிய தமிழ்ப்பெருமக்கள் அனைவருக்கும் எண்ணற்ற மணிபோன்ற இலக்கியச் செல்வங்களை ஈந்தாள்!<br>❖ அதனால் அவள் பல ஆண்டுகள், மேலும் பல ஆண்டுகள், அதற்கு மேலும் பல ஆயிரம் ஆண்டுகள் வாழ வேண்டும் எனச் சு.வில்வரத்தினம் வாழ்த்திப் பாடியது பொருத்தமானதுதான்.<br>❖ மேலும், எண்ணற்ற இலக்கிய வளங்களைக் கொண்டிருந்தது, பண்டைய தமிழ்ப்பகுதியாம் கபாடபுரம்.<br>❖ அதைக் கடல் காவு கொண்டு விழுங்கியது.<br>❖ அதன் பின்னும் தளராது, சுழன்று வீசும் எதிர்ப்புக் காற்றைத் தாண்டி, தடுத்து நிற்கும் அலைகடல், நெருப்பாறு, மலைமுகடு போன்ற சக்திகளை வென்று, தமிழ் செல்லட்டும் என்னும் பாடலைக் காலத்தாலும் அழிக்கவியலாத, தொல்கனிமங்கள் பற்றிக் கூறும் உரமான செய்திகளையெல்லாம் சேர்த்துக் கொண்டு பாடத்தான் வேண்டும் எனச் சு. வில்வரத்தினம் குறிப்பிடுகிறார். | 1<br>½<br>½<br>½<br>½<br>1 | 4 |
| 32. | **இடம் :**<br>இத்தொடர், பெரியவன் கவிராயர் இயற்றிய "திருமலை முருகன் பள்ளு" என்னும் நூலில் வடகரை நாட்டுப்பள்ளி கூறுவதாய் அமைந்துள்ளது. அப்பள்ளி தன் நாட்டுவளம் பற்றிக் கூறுகையில் "சலச வாவியில் செங்கயல் பாயும்" என்று கூறினாள்.<br>**பொருள் :**<br>வடகரைநாட்டில் தாமரைத் தடாகத்தில் உள்ள செந்நிறக் கயல்மீன்கள் அங்குமிங்கும் துள்ளிப்பாயும்.<br>**விளக்கம்:**<br>வடகரை நாட்டில் தாமரைத் தடாகத்தில் மிகுந்த நீர் நிரம்பி இருப்பதால் அங்கே எண்ணற்ற தாமரைப்பூக்கள் பூத்துள்ளன. மேலும், நீர்வாழ் உயிரினமான செந்நிறங்கொண்ட கயல்மீன்கள் மகிழ்ச்சியுடன் அங்கும் இங்கும் துள்ளிப்பாய்ந்து கண்ணுக்கு விருந்து படைக்கின்றன என்கிறாள், மூத்தபள்ளி. | 2<br>1<br>1 | 4 |
| 33. | **ஞாலம் கருதினும் கை கூடும்:**<br>❖ ஒருவன் தக்க காலம் அறிந்து, ஏற்ற இடம் அறிந்து ஒரு செயலைச் செய்வானாயின் அவன் இவ்வுலகத்தினையே ஆளக் கருதினாலும் அது கை கூடும் என்கிறார், வள்ளுவர்.<br>❖ ஒருவனுக்கு ஏற்ற காலம் வாய்க்கவில்லை என்றால், அவன் தன் வலிமை முதலியவற்றால் முயன்றாலும், செய்து முடிக்க விரும்பும் செயல்களைச் செய்து முடிக்க | 1<br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| | இயலாது; தன் வலிமை முதலியவற்றால் ஏற்ற காலத்தை வருவிக்கவும் இயலாது.<br>❖ ஆகவே, ஒருவன் தன் செயல்களைச் செய்து முடிப்பதற்கு ஏற்ற காலம் அமைவது அருமை என்பது தோன்ற வள்ளுவர் 'இயைந்தக்கால்' என்றார்.<br>**காலத்தே முடித்தல் வேண்டும்:**<br>❖ எனவே, காலம் நீடித்து நில்லாமல் விரைந்து செல்லும் தன்மையது என்பதை உணர்ந்து, ஏற்ற காலம் வாய்த்தபோது, செய்தற்கு அரிய செயல்களை எல்லாம் முடித்தல் வேண்டும், என்கிறார், வள்ளுவர். | 1<br><br>1 | |
| 34. | **சேரநாடு செல்வவளம் மிக்கது:**<br>❖ இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் இடையறாது கொடுக்கும் பண்புடையவன். தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக் காத்தான்.<br>❖ சேரலாதனின் குடிமக்கள் பசி, பிணி அறியாதவர்கள். எனவே, நாட்டை விட்டு வெளியேற வேண்டிய தேவைகள் அற்றவர்கள். உள்நாட்டிலேயே சுற்றத்தாரோடு வாழ்பவர்கள்.<br>❖ சேரலாதன், சான்றோர்களுக்கு அரிய பொருள்களைக் கொடையாக வழங்கும் இயல்புடையவன்.<br>❖ அவனுடைய நாட்டில் எப்போதும் விழாக்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கும்.<br>❖ சேரலாதன் புதுவருவாய்ப் பெருக்கமும், ஈகையால் இன்பமும் உடைய காரணத்தினால் சேரநாடு செல்வ வளம் மிக்கது என்பதை உறுதிப்படுத்துகின்றன. | 1<br><br>1<br><br>1<br><br>1 | 4 |
| | **பிரிவு - 2**<br>**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x4=8** |
| 35. | **இயற்கையில் கிட்டும் பொருள்கள் :**<br>❖ விளைச்சல் கூடுதலாக வேண்டுமென நினைத்து ஏராளமான உரங்களைப் போட்டால் நாளாக நாளாக மண் நஞ்சாகிப் போய் விளைச்சலும் குறைந்து விடும்.<br>❖ நம் முன்னோர்கள் எந்த இரசாயனப் பூச்சிக்கொல்லியையும் பயன்படுத்தவில்லை.<br>❖ வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்க வேண்டியவை வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகும்.<br>❖ இவை நம்மைச் சூழ வளரும், எளிதில் கிட்டும் இயற்கைப் பொருள்கள். இவற்றை நாமும் வளர்க்கலாம்.<br>**திட்டமிட்டும் செயல்பட வேண்டும் :**<br>❖மேற்கண்ட பொருள்களைக் கோமியத்தில் ஊறவைப்பர்.<br>❖வேளாண்மை சார்ந்த துணைத்தொழில், மாடு வளர்த்தல், தனியார் பலரும் பன்னோக்கில் மாடுகளை வளர்க்கின்றனர்.<br>❖திட்டமிட்டுச் செயல்பட்டால் ஒரு சொட்டுக் கோமியத்தைக்கூட வீணாகாமல் பயன்படுத்தலாம்.<br>❖எனவே, வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி தயாரிப்பது நடைமுறைக்குச் சாத்தியமானதே. | 2<br><br>2 | 4 |
| 36. | **சமணப்பள்ளிகளும் பெண்கல்வியும்**<br>❖ சமணத்துறவியர் மலைக்குகைகளில் தங்கி, மாணவர்களுக்குக் கல்வியினையும் சமயக் கருத்துகளையும் போதித்தனர்.<br>❖ அத்துறைவியரின் 'படுக்கை' என்னும் சொல்லுக்குப் | 1<br><br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| | 'பள்ளி' என்று பொருள். அப்படுக்கையின்மீது மாணவர்கள் அமர்ந்து கற்றதனால் 'பள்ளிக்கூடம்' என வழங்கலாயிற்று.<br>❖ வந்தவாசிக்கு அருகே வேடல் என்னும் ஊர் உள்ளது. அங்குப் பெண் சமண ஆசிரியர் ஒருவர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார்.<br>❖ பட்டினிக்குரத்தி என்னும் சமணப் பெண்ஆசிரியர் ஒருவர் விளாப்பாக்கத்தில் சமணப்பள்ளி ஒன்றை நிறுவியுள்ளார்.<br>❖ பெண்களுக்கெனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப் பள்ளிகள் பெண்கள் பள்ளிகள் என வழங்கப்பட்டன. | 1<br>1 | |
| 37. | **ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள்:**<br>❖ புதுச்சேரி ஆளுநர் துய்மா பிறப்பித்த ஆணைப்படி, புதுச்சேரி பட்டிணத்திற்கு உள்ளேயும் கோவிலுக்குத் தெற்காகப் போகிற உப்பங்கழி பகுதியிலும் பட்டினத்தின் வீதிகள் எவ்விடத்திலும் காலைக்கடன் கழிப்பவர்களுக்கு ஆறு பணம் விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.<br>❖ பல்வேறு காரணங்களுக்காக மரண தண்டனை வழங்கப்பட்டது; மேலும், காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் இடுதல் ஆகிய தண்டனைகளும் அக்காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.<br>❖ தொடர்ந்து திருடிக்கொண்டிருந்த ஒரு கும்பல் பிடிபட்டது. அக்கும்பலின் தலைவன் கடைத்தெருவில் தூக்கிலிடப்பட்டான்.<br>❖ அவனுடனிருந்த இருவரின் காதுகள் அறுக்கப்பட்டன; அதனோடு ஐம்பது கசை அடிகளும் வழங்கப்பட்டன. | 1<br>1<br>1<br>1 | 4 |
| 38. | **ஃபிரெஸ்கோ ஓவியங்கள் :**<br>❖ ஃபிரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள். ஃபிரெஸ்கோ ஓவியங்கள் சுண்ணாம்புக் காரைப்பூச்சுமீது அதன் ஈரம் காயும் முன் நுட்பமாய் வரையப்படும் பழமையான ஓவியங்கள்.<br>❖ அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் இவ்வகையைச் சார்ந்தவை ஆகும்.<br>**கற்றளிக் கோவில்கள்: கல் + தளி = கற்றளி**<br>❖ செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதைப் போல, கருங்கற்களை அடுக்கிக் கட்டும் கோவில் கற்றளிக் கோவில் எனப்படும்.<br>❖ இஃது ஏழாம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னன் உருவாக்கிய வடிவமாகும்.<br>❖ மகாபலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் ஆகியன கற்றளிக் கோவில்களுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.<br>❖ முழுமையாகக் கற்களைக்கொண்டே கட்டப்பட்ட மிகப்பெரிய கற்றளிக்கோவில் தஞ்சைப் பெரியகோவிலே ஆகும். | 2<br>2 | 4 |
| | **பிரிவு - 3**<br>**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | | **3x4=12** |
| 39. | **சொல் பின்வருநிலையணி:**<br>**அணி இலக்கணம்:**<br>செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது, சொல்பின்வரு நிலையணி ஆகும். | 2 | 4 |

| | | | |
|---|---|---|---|
| | **சான்று**<br>"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்<br>பற்றுக பற்று விடற்கு"<br>**சான்று விளக்கம்:**<br>பற்றுகளை அகற்றுவதற்காகவே பற்று இல்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.<br>**அணிப்பொருத்தம்:**<br>'பற்று' என்னும் ஒரே சொல் **பற்றிக் கொள்ளுதல், விருப்பம், பாதம்** எனப் பல்வேறு பொருள்களில் வந்துள்ளது. எனவே, இது சொல்பின்வரு நிலையணி ஆகும். | 1<br><br><br><br><br><br>1 | |
| | **(அல்லது)**<br>**அணிச்சுட்டல் :**<br>**"தீயினால் சுட்டபுண் உள்ளாறும், ஆறாதே நாவினால் சுட்ட வடு"** -இக்குறட்பாவில் பயின்றுவந்துள்ள அணி வேற்றுமையணி ஆகும்.<br>**அணி இலக்கணம்:**<br>முதலில் இரு பொருள்களுக்கு ஒப்புமையைக் கூறி, பின்னர் அவற்றை வேறுபடுத்தி, ஒன்றைவிட ஒன்று வேறுபட்டது எனக் கூறுதல் வேற்றுமையணி ஆகும்.<br>**சான்று விளக்கம்:**<br>நெருப்பால் சுட்ட புண் விரைந்து ஆறும்; நாவினால் சுட்ட வடு ஆறாது என்பது இப்பாட்டின் பொருள்.<br>**அணிப் பொருத்தம்:**<br>முதலில், தீயினால் சுடுதலும் நாவினாலும் சுடுதலும் ஒப்புமை தோன்றக் கூறப்பட்டன. பின்னர், தீயினால் சுட்ட புண் உள்ளே ஆறிவிடும் என்றும், நாவினால் சுட்டது வடுவாகி விடும் என்றும் வேறுபடுத்திக் கூறப்பட்டமையால் இது வேற்றுமையணி ஆகும். | 1<br><br>1<br><br>1<br><br>1 | 4 |
| 40. | **இலக்கிய நயம் பாராட்டல்**<br>மையக்கருத்து, திரண்ட கருத்து<br>எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தம், சுவை<br>**(மையக்கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 | **4** |
| 41. | **வாழ்க்கை நிகழ்வில் பழமொழி**<br>பழமொழி விளக்கம்<br>வாழ்க்கை நிகழ்வில் பழமொழி (கதை)<br>அறியும் கருத்து (நீதி)<br>**(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>3 | **4** |
| 42. | **அ) வா - வேர்ச்சொல்**<br>அருணா வீட்டுக்கு **வந்தாள். (வினைமுற்று)**<br>கருணாகரன் மேடையில் **வந்து** நின்றார். **(வினையெச்சம்)**<br>அங்கு **வந்த** பேருந்தில் அனைவரும் ஏறினர். **(பெயரெச்சம்)**<br>என்னைப் பார்க்க **வந்தவர்** என் தந்தையின் நண்பர். **(வினையாலணையும் பெயர்)** | 1<br>1<br>1<br>1 | **4** |
| 43. | 1. பண்பாடு மக்களை உருவாக்காது; மக்கள் பண்பாட்டை உருவாக்குகிறார்கள்.<br>2. உலகில் பார்க்க விரும்பும் மாற்றமாக நீங்கள் இருக்க வேண்டும். | 1<br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| | 3. கல்வி, வலிமையான ஆயுதம், அதனைப் பயன்படுத்தி இவ்வுலகையே மாற்றலாம்.<br>4. உலகிலுள்ள அழகை உற்று நோக்குவதே மூளையைத் தூய்மைப்படுத்துவதற்கான முதல் முயற்சியாகும். | 1<br><br>1 | |
| | **பகுதி –IV**<br>**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** | | **3x6=18** |
| 44. | **அ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம்:**<br>**மாளிகை நகரம்:**<br>**"வடவரை பொருவென மலிந்த மேனிலை"**<br>❖ மேருமலையினைப் போன்று மதீனா நகரின் மேன்மாடங்கள் உயர்ந்திருந்தன.<br>❖ அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடலொலிபோன்று இருந்தது.<br>❖ மதீனா நகரின் வீதிகள் பேரண்டத்தைப்போன்று பரந்திருந்தன.<br>❖ அந்நகரில் சிறிதும் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.<br>**கொடை நகரம்:**<br>**"கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணிய(து)"**<br>❖ பழைமையான மதீனா நகரம், கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தைக் கொண்டது. அங்கு எந்தப் பொருளும் இல்லையென்று சொல்வதற்கு இல்லை.<br>❖ அப்படிக் கேட்போர்க்கும் அப்பொருளை எல்லாம் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் உண்டு.<br>❖ அவ்வள்ளல்களை விடக் குறையாத பெரும் புகழைப் பெற்றது மதீனா நகரம்.<br>**பொன்னகரம்:**<br>**"தோரணத் தொடும் கொடிக்காடு துன்னலால்"**<br>❖ கட்டப்பட்ட தோரணங்களும் கொடிகளும் காடுபோல நெருங்கியிருந்தன.<br>❖ மலைபோன்ற யானைகள் அவ்விடத்தில் நிறைந்திருந்தன.<br>❖ வழிகள் யாவும் ஒழுங்குடன் காணப்பட்டன.<br>❖ இவற்றால் முழுமை பெற்ற பூமியைப்போல மதீனா நகரம் பொன்னெனப் பொலிந்தது.<br>**மனைநகரம்:**<br>**"சுதையொளி மேனிலை துலங்கித் தோன்றலால்"**<br>❖ மதீனா நகரத்தில் வெண்சுண்ணச் சாந்தினைக் கொண்ட மாளிகைகள் ஒளிர்ந்தன. வீதிகளில் புதிய பூக்கள் சிந்திக் கிடந்தன.<br>❖ ஒவ்வொருவரையும் அழைத்துக் கொடுக்கும் விருந்தானது இனிமையுடன் இருந்தது.<br>❖ இதனால் அந்நகர் திருமண வீட்டைப்போன்று பொலிவுடன் காட்சியளித்தது.<br>**மாநகரம்:**<br>**"உறுபகை வறுமைநோய் ஓட ஓட்டிமேல்"**<br>❖ பகை, வறுமை, நோய் முதலியவை மதீனா நகரிலிருந்து ஓடிவிட்டன. மேலும், குறைவில்லாத மானுட அறத்தை உடைய செங்கோல் ஆட்சி நடத்திப் பெரும்புகழ் பெற்ற சிறந்த அரசரைப்போலப் பொலிவுடன் இருந்தது மதீனா நகரம். | 1<br><br>1<br><br>1<br><br>1<br><br>1 | 6 |

| | | | |
|---|---|---|---|
| | **ஒண்ணகரம்:**<br>**"தெண்டிரை ஆரமும் பூணுஞ் சிந்தலால்"**<br>❖ அலைகடலானது முத்தையும் பல்வேறு அணிகளையும் சிதறுவதுபோல மதீனா நகரில் மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுகின்றனர்.<br>❖ தேன் அருந்தியவர்கள் மயங்குவதுபோலப் பலவாறான பொருள் வளத்தால் ஒளி பெற்றுத் திகழ்கிறது மதீனா நகரம்.<br>**செம்மை நகரம்:**<br>**"தானமும் ஒழுக்கமும் தவமும் ஈகையும்"**<br>❖ மதீனா நகரில் தானம், ஒழுக்கம், வதம், ஈகை, மானம் முதலியன பூத்திருந்தன.<br>❖ திண்ணிய வலிமை நல்கும் வெற்றி, அவ்வெற்றியைத் தருகின்ற குறைவற்ற ஊக்கம் முதலியன காய்த்திருந்தன.<br>❖ தீன் என்னும் செல்வம் பழுத்திருந்த செம்மை பொருந்திய நகராக மதீனா இருந்தது. | ½<br><br><br><br><br><br><br>½ | |
| | **(அல்லது)**<br>**ஆ) அடக்கமுடைமை:**<br>**மலையினும் மாணப் பெரிது:**<br>**"நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்<br>மலையினும் மாணப் பெரிது"**<br>❖ அடக்கமுடைமை என்பது தன் மெய், மொழி, மனம் ஆகியன தீய நெறியில் செல்லாது அடங்கி வாழ்தலாகும்.<br>❖ இத்தகைய அடக்கமுள்ளவனின் உயர்வானது எல்லாராலும் பார்க்கக்கூடிய மிகப்பெரிய தோற்றம் கொண்ட மலையைவிட மிகப் பெரியதாகும்.<br>**நா காக்க, காவாக்கால் சோகாப்பர்!**<br>**"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்<br>சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"**<br>❖ அடக்கி ஆள வேண்டிய மனம், மொழி, மெய், ஆகியவற்றுள்ளும் நாவடக்கம் இன்றியமையாததாகும்.<br>❖ நாவடக்கம் இல்லாமல் பேசினால் ஏற்பட்டு அதன் காரணமாய்ப் பல துன்பங்கள் வந்து சேரும்.<br>**நாவினால் சுட்ட வடு உள்ளாறாது!**<br>**"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே<br>நாவினால் சுட்ட வடு"**<br>❖ ஒருவனை நெருப்பினால் சுட்டதால் ஏற்பட்ட புண் உடலளவில் வடுவாய் மாறாதிருந்தாலும் உள்ளத்தளவில் ஏற்பட்ட துன்பம் விரைந்து ஆறிவிடும்.<br>❖ ஆனால், கொடுமொழியால் நாவினால் ஒருவனைச் சுட்டதால் ஏற்பட்ட வடு, என்றும் மாறாது அவன் நெஞ்சில் நிலைத்திருக்கும்.<br>❖ ஆதலால், பிற அடக்கங்களினும் நாவடக்கம் ஒருவனுக்கு மிக இன்றியமையாததாகும். | 2<br><br><br><br><br><br><br><br>2<br><br><br><br><br><br>2 | 6 |
| 45. | **அ) சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே:**<br>**தொடக்கஉரை:**<br>பெரியோர்களே! பெருமைசால் பெண்மக்களே! அனைவருக்கும் வணக்கம்.<br>இன்று நான், சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே என்னும் தலைப்பில் பேசவிருக்கிறேன்.<br>**இயற்கை வேளாண்மை:**<br>இயற்கையாய் அமைந்த ஐம்பூதங்களுள் ஒன்றுதான் நிலம். அந்த நிலத்தில் நாம் செய்யும் தொழிலே, | ½ | 6 |

| | | | |
|---|---|---|---|
| | வேளாண்மையாகும்.<br>இயற்கை, எப்போதுமே தன்னோடு இயைந்து வாழ்பவர்க்கே நன்மை அளிக்கும். நாம் இந்நிலைக்கு மாறாய்ச் செயல்பட்டதால் மனித நலமே பாழ்பட்டு இன்று வாழ வேண்டியுள்ளது.<br>**செயற்கை வேளாண்மை:**<br>நாம் மிகுந்த விளைச்சலைப் பெற வேண்டும் என்ற நோக்கில் யூரியா, பாஸ்பேட் போன்ற செயற்கை உரங்களையும் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் பயன்படுத்தியதால் நிலம் பாழ்பட்டது.<br>அந்த நிலத்தில் விளைந்த பயிர்களை உண்ட உயிரிகளின் நலமும் பாழ்பட்டது. ஆகவே முதலில் அந்த நிலத்தைப் பாதுகாத்தல் வேண்டும். நிலத்தை எப்படிப் பாதுகாப்பது?<br>**நிலத்தைப் பாதுகாத்தல்:**<br>அறுவடை முடிந்த பிறகு, வைக்கோலைச் சமமாய்ப் பரப்பி, மடியச் செய்து, மறுபருவம் வந்தவுடன் நிலத்தில் நீரைத் தேக்கி உழ வேண்டும்.<br>மேலும் உரச்செடிகளை வளர்த்து அவற்றை மடக்கி உழுது உரமாய் அளிக்கலாம். நிலத்திலிருந்து கிட்டும் செத்தை செடிகளை மீண்டும் நிலத்திற்கே தர வேண்டும்.<br>இச்செயல்கள் பயிர்கள் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிக்கும்.<br>**தொழுஉரம்:**<br>இங்கு ஒரு வினா எழலாம். யூரியா போன்ற செயற்கை உரங்கள் வேண்டாமெனில், எதை உரமாய் இடுவது என்று சிலர் கேட்பர். அதற்குப் பதில், தொழு உரத்தை இட வேண்டும் என்பதுதான்.<br>தொழுஉரம் என்றால் என்ன? மாட்டுச்சாணம், கோமியம் ஆகியவற்றைக் கலந்து, அதை வைக்கோலோடு சேர்த்து மக்கச்செய்து நன்செய் நிலத்துக்கு இடலாம். புன்செய் நிலமாய் இருந்தால் அதில் காய்ந்த இலைச்சருகு, சாணத்தை எரிப்பதனால் கிட்டும் சாம்பல் ஆகியவற்றைக் கலந்து இடலாம்.<br>**பனைமரம்:**<br>அதேபோல், பனைமரங்களையும் நிலத்தில் வளரச்செய்தால், அவை சிறந்த காற்றுத் தடுப்பானாய்ப் பயன்படும். நிலத்தில் நீர் மட்டம் குறையாமல் தண்ணீரைச் சேமித்து வைக்கும்.<br>இவ்வாறு நாம் பயன்படுத்துகிற உரம், மருந்து ஆகியன எல்லாம் இயற்கையாய் இருப்பது சுற்றுச் சூழலைக் காப்பதற்கான வழியன்றோ?<br>**நன்றியுரை:**<br>மண்வளமே மனிதவளமே! மழை நீர்ச்சேகரிப்போம்! நிலத்தடி நீர்மட்ட உயர்வு! இயற்கை வேளாண்மையைப் பெருக்குவோம்! சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்! என்று கூறி என் உரையை முடிக்கின்றேன். | 1<br>1<br>1<br>1<br>1<br>½ | |
| | **(அல்லது)**<br>**ஆ) சுந்தரராமசாமியின் காற்றில் கலந்த பேரோசை:**<br>**ஜீவா மேடையில் வாழ்ந்த மனிதர்:**<br>❖ ஜீவாவின் மரணச்செய்தியை நண்பர்களிடம் சொன்னபோது, 'பேசிக்கொண்டிருக்கும் போது இறந்தாரா? என்று கேட்கிறார்கள். அ∴தாவது, நண்பர்களின் மனத்தில் ஜீவா எப்போதும் மேடையில் பேசிக் கொண்டிருக்கும் தோற்றமே நிறைந்திருக்கிறது.<br>**ஜீவா எனும் சங்கநாதம் மறைதல்:**<br>❖ தமிழகத்தின் கலை இலக்கிய அரசியல் மேடைகளில் | 1 | 6 |

| | | | |
|---|---|---|---|
| | முழங்கிய ஜீவாவின் மறைவு, ஒரு பேரோசையின் மறைவாகத்தான் உணரப்படுகிறது. எனவேதான், அப்பேரோசை காற்றில் கலந்தது என்று சுந்தர ராமசாமி எழுதுகிறார்.<br>**ஜீவாவின் பேச்சு நடை:**<br>❖ பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும்.<br>❖ அதோடு அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகுநூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.<br>❖ அவருடைய பாணி இரவல்பாணி அல்ல; கற்று அறிந்ததும் அல்ல.<br>❖ நம் நாட்டு மக்களின் தரத்தையும், அனுபல அறிவையும், பழக்கவழக்கங்களையும், நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்து கொண்ட ஒரு மனிதன், விஷயத்தைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையும் கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட பேச்சுப்பாணி அது.<br>❖ விசயத்தை வண்டி வண்டியாகக் குவித்துப் சின்ன மூளைகளைக் குழப்பி வாதனைக்கு உள்ளாக்குவது பல பிரசிங்கிகளுக்குப் பொழுதுபோக்கு. ஜீவா இதற்கு எதிரி. ஒரு கைப்பிடி விசயத்தை விரிவாகச் சொல்லிப் புரியவைத்துவிட்டால் போதும் என்பதே அவருடைய எண்ணம்.<br>❖ பேச்சு பயனைத் தரவேண்டுமென்றால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்.<br>**பாமர மைந்தன்:**<br>❖ ஜீவா தாம் ஏற்றுக்கொண்ட தத்துவத்தை, சித்தாந்தக் கருத்துகளை மேடையில் கலைநயத்துடன் முழங்கியவர். மனித குலத்தை முன்னேற்றுவதற்காகத் தயக்கமில்லாமல் பட்டிதொட்டிகளிளெல்லாம் பேசினார். இளைஞர்களைப் பார்த்து என்னைப் பயன்படுத்திக்கொள். முடிந்தமட்டும் என்னைப் பயன்படுத்திக்கொள்வதே நீ எனக்குத் தரும் கைம்மாறு என்பது ஜீவாவின் பிரார்த்தனை.<br>**மேடையிலே வாழ்ந்த மேதை:**<br>❖ ஜீவா, ஆயிரக்கணக்கான மக்களின் முன் தம் பேச்சின்மூலம் சிங்கத்தைப் போலக் க்ர்ஜனை செய்தவர்; சங்கநாதம் முழங்கியவர்; மேடையிலேயே வாழ்ந்தவர்.<br>**காற்றில் கலந்த பேரோசை:**<br>❖ பேச்சின் வடிவமாய் வாழ்ந்த ஜீவா பேரோசையாகக் கருதத்தக்கவர். அத்தகையவரின் எதிர்பாராத மரணம், எழுத்தாளர் சுந்தர ராமசாமிக்குப் பேரோசை ஒன்று எழும்பித் தேய்ந்தது போலவே தோன்றுகிறது. பேச்சுக்கலை அவருடைய காலடியில் விழுந்து கிடந்தது. இப்போது மேடையில் ஒரு நாற்காலி காலியாகிவிட்டது. அது என்றும் காலியாகவே கிடக்கும். | 1<br>1<br>1<br>1<br>1 | |
| 46. | **அ) பாரதியின் இதழாளர் முகம்:**<br>**முன்னுரை :**<br>**“பாரிடைத் துயில்வோர் கண்ணிற்<br>பாய்ந்திடும் எழுச்சி நீதான்”** என்ற பாவேந்தரின் வரிகளுக்கேற்ப ‘எழுத்து தெய்வம், எழுதுகோலும் தெய்வம்’ என்னும் ஒப்பரிய நோக்கு பாரதியின் உள்ளத்தில் ஆழ ஊன்றிக் கால் பதித்து நின்றது. எழுதுவது அவரது இனிய | 1 | 6 |

| | | | |
|---|---|---|---|
| | பணி என்றாலும், அதைக் காசாக்கும் கலையாக அவர் கருதிடவில்லை. நாடே தம் வீடென எண்ணித் தம் கவிதைமூலம் போர் முரசம் கொட்டியவர். கவிதை என்னும கைவாள் ஒன்று மட்டும் இருந்தால் போதாது, நாளிதழ் என்னும் வேலும் இருந்தால்தான், முப்பதுகோடி மக்களை அடிமைச்சேற்றில் அழுத்தக் கருதும் ஆங்கில அரசு என்னும் அரக்கனை வெல்ல இயலும் என்று முடிவெடுத்தார்.<br>**இதழியல் தொழிலில் கால் பதித்தார் :**<br>பாரதியார், இதழியல் என்னும் ஏணியில் முதன் முதலில் கால் பதித்தது சுதேசமித்திரன் என்னும் நாளிதழ் படியில்தான். பின் பல்வேறு காரணங்களால் அவர் சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி , விஜயா, சூரியோதயம், கர்மயோகி முதலான இதழ்களில் பணியாற்றினார். இருப்பினும், அவரின் எழுத்து வேகமோ, இதயத்தில் தேங்கி நின்ற விடுதலைத்தாகமோ குன்றவில்லை. | 1 | |
| | **பாரதியின் படைப்புகள் :**<br>சர்வஜனமித்திரன், ஞானபாநு, காமன்வீல், கலைமகள், தேசபக்தன், கதாரத்னாகரம் போன்ற இதழ்களில் பாரதி தன் படைப்பகளை வெளியிட்டுள்ளார்.<br>**பாரதியின் புனைப்பெயர்களும் காரணமும் :**<br>**“உலகினை ஒன்றுசேர்க்கப் பேரறிவாளர்**<br>**நெஞ்சில் பிறந்த பத்திரிக்கைப் பெண்ணே”** | 1 | |
| | என்ற பாரதிதாசன் வரிகளுக்கேற்ப சிறைக்குள் சென்றால் தாம் மட்டுமன்றித் தம் எழுத்துக்களும் முடக்கப்பட்டுவிடும் என்று உணர்ந்தார், பாரதி. தன்பெயரையும் தன்னையும் முன்னிலைப்படுத்திக்கொள்ள விரும்பும் மனிதர்களுக்கிடையில் “தான்” என்ற ஒன்றை ஒழித்தவர் பாரதி. ஆங்கிலேயர்களின் கெடுபிடிகளால், விடுதலை வேட்கையூட்டும் கருத்துகள் மக்களைச் சென்றடைந்தால் போதும் என்று எண்ணி காளிதாசன், ஷெல்லிதாசன், சக்திதாசன், காசி எனப் பல புனைப்பெயர்களில் எழுதியுள்ளார். | 1 | |
| | **பார்த்தாலே கருத்து பதியும் :**<br>**“தென்னை மரத்தில் இருக்கும் குருத்து**<br>**பாரதியின் எழுத்தில் எளிமையாய் புரியும் கருத்து”**<br>படித்துப் புரிந்துகொள்ளத் துணை செய்யும் எழுத்துகளைவிடப் பார்த்தவுடன் கருத்தை எளிதில் புரிந்துகொள்ளச் செய்யும் திறம் கொண்டவை கருத்துப்படங்களும் கேலிச் சித்திரங்களுமாகும். இதனை நன்குணர்ந்த பாரதி தமிழ் இதழியல் துறையில் முதன் முதலாக, இந்தியா, விஜயா ஆகிய இரு இதழ்களிலும் கருத்துப்படங்களை வெளியிட்டு, முன்னோடியாய் விளங்கினார். | | |
| | **வாய்வீச்சுக்காரர் அல்லர், செயல்வீரர் :**<br>யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்’ என்று சொல்லளவில் கூறித் தம் தமிழ்ப்பற்றை நிறுத்திக்கொண்டவரல்லர், பாரதி, ‘அரைகுறையாய் ஆங்கிலக்கலப்போடு பேசுவதுதான் அறிவு இருப்பதற்கு அடையாளம்’ என மூடத்தனமாய்த் தமிழ்மக்கள் கருதிக்கொண்டிருந்த அக்காலத்திலே, தம் தமிழ் இதழ்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் ஆகியவற்றை முதன் முதலில் குறிப்பிட்டவர், பாரதி. அது | 1 | |

| | | | |
|---|---|---|---|
| | மட்டுமா? அன்று தமிழ்ச்செய்தித்தாள்களில் தலைப்புகளை முதலில் ஆங்கிலத்தில் அமைப்பர்; பின், அவற்றிற்குக் கீழ் தமிழ்த்தலைப்புகளை அமைப்பர். இந்த விசித்திர முறை கண்டு கொதிப்புற்றார், பாரதி. தமிழ்ச்செய்தித்தாள்களில் ஆங்கிலத்தில் தலைப்பிடுவதா எனச் சுதேசமித்திரனில் சாடிச் சீறினார்.<br>**வீழ்வேனென்று நினைத்தாயோ? :**<br>பாரதியின் இதழியல் துறையில் புதுமைநோக்கும், விடுதலைப் புரட்சியும் கொடிகட்டிப்பறந்தன.<br>'வேலையைச் செய்வோம், சம்பளத்தைப் பெறுவோம்; வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம்' எனச் சாதாரண மனிதனாய்ப் பாரதி வாழ விரும்பவில்லை.<br>**"தேடிச் சோறுநிதம் தின்று – பல**<br>**சின்னஞ் சிறுகதைகள் பேசி**<br>---------------------<br>--------------------------<br>**வேடிக்கை மனிதரைப் போல் - நான்**<br>**வீழ்வேன் என்று நினைத்தாயோ!".**<br>என்று வேறு ஓர் இடத்தில் அவர் கூறியதற்கிணங்க, வேறு பல துறைகளிலும் சிறந்து விளங்குவது போல் இதழாளர் பணியிலும் முன் வரிசையில் நிற்கிறார், பாரதி.<br>**முடிவுரை:**<br>பாரதியின் கடிதங்களும், கருத்துப்படத் தொகுப்பும், இவர் நடத்திய இந்த இதழ்கள் எல்லாம் சிறப்பாகத் தொகுக்கப்பட்டு இன்றைக்கு நூலாக்கம் பெற்றுள்ளன. இவையெல்லாம் தமிழினத்தின் பேறு. | ½<br><br><br><br><br><br><br><br>½ | |
| | **(அல்லது)**<br>**ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்கள்:**<br>**முன்னுரை:**<br>நம் ஒவ்வொருவரிடமும் தனித்தன்மைகள் விருப்பங்கள் உள்ளன. ஆயினும், பிறரோடு உறவு கொள்கையில் அவர்களுக்கேற்றவாறு நம்மை மறைத்து, மாற்றிக்கொள்கிறோம்; வளைந்து கொடுக்கிறோம். ஆனால் நம் மனசாட்சி நம்முடைய இயல்பை நினைவூட்டிக் கொண்டே இருக்கும். உண்மை முகத்தை இழந்து அடையாளமற்ற தன்மையில் மாற்றி நாம் காட்டுகிற பிம்பம் பற்றி நம் மனசாட்சியைக் கேள்வி கேட்பதோடு நம் அசலையும் நினைவூட்டுகிறது இச்சிறுகதை.<br>**கதையின் கரு:**<br>"இந்த உலகமே நாடகமேடை; அதில் அனைத்து ஆண்களும் பெண்களும் வெறும் நடிகர்களே" - ஷேக்ஸ்பியர்<br>**கதை மாந்தர்கள்**<br>❖ ஆசிரியர்<br>❖ மனசாட்சி<br>**ஆளும் மன்னனா அதிகாரியா?**<br>**"இடம் பொருத்து நிறம் மாறும் பச்சோந்தி - மனிதமனம்"**<br>❖ கந்தன் கட்டட வேலை செய்யும் தொழிலாளி. அவன் மாலை வேளைகளில் மன்னனாக மாறி மேடை நாடகத்தில் நடிப்பான்; அதிகாரம் படைத்த அதிகாரியாகத் தோன்றி மிடுக்காக நடப்பான்; போர்முனைக்குச் செல்லும் வீரனாய்த் தோன்றி ஆர்ப்பட்டமாய் முழங்குவான். | ½<br><br><br><br>½<br><br><br>½<br><br><br>1 | 6 |

| | | | |
|---|---|---|---|
| | ❖ இப்படி அவன் எத்தனை வேடமிட்டாலும் அவன் யார்? மன்னனா அதிகாரியா போர்வீரனா? அல்லன்.<br>❖ நாடகமேடையில் ஏறி நடிக்கும் அந்த நான்கு மணி நேரந்தான் மன்னன், அதிகாரி, போர்வீரன்! மேடையை விட்டு இறங்கிவிட்டால் அவன் கட்டட வேலை செய்யும் கந்தன்தான்.<br>❖ இந்த உண்மையை எல்லாரும் ஏற்றுக்கொண்டாலும், சொந்த வாழ்க்கையில் இந்த உண்மையை ஏற்க எவரும் தயாராயில்லை. | | |
| | **எல்லோரும் நடிக்கிறோம்; மேடையில் அன்று!**<br>**“எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்”**<br>❖ ஆம்; எல்லோரும் நடிக்கிறோம். எவர் முன்னும் நடிக்கிறோம்; எந்த நேரமும் நடிக்கிறோம்.<br>❖ நாம் நாமாக இருப்பதில்லை. மனச்சாட்சியினை மறைத்துவிட்டு, நம் உண்மையான முகத்தைக் கழற்றிவிட்டு, ஒவ்வொருவருக்கேற்ப முகமூடிகளை மாற்றி மாற்றி அணிந்து, ஏமாற்றுகிறோம்.<br>❖ இருபத்துநான்கு மணி நேரம் நாம் நடித்துக்கொண்டிருக்கிறோம். அதனால்தான் சேக்ஸ்பியர், “இந்த உலகமே நாடகமேடை; அதில் அனைத்து ஆண்களும் பெண்களும் வெறு நடிகர்களே. ஒருவருக்கே பல வேடங்கள் உண்டு” என்றாரோ? | 1 | |
| | **தப்பிப்பதற்கு! யாரிடமிருந்து?**<br>**“உன் மனமே உனக்கு முதலாளி”**<br>❖ அதற்காக மக்கள் தங்களின் உண்மையான முகங்களை மறைத்து முகமூடி அணிந்து கொள்கிறார்கள். எதற்காக?<br>❖ தப்பிப்பதற்காக! யாரிடமிருந்து? பெற்றோரிடமிருந்து! நண்பரிடமிருந்து! மனைவிடமிருந்து! ஏன் தன்னிடமிருந்துங்கூட.<br>❖ மனைவியிடமிருந்துகூடவா எனச் சிலர் கேட்கலாம்! | ½ | |
| | **அவளிடமும் பல முகங்கள்!**<br>**“உன் மனதில் நான் அன்னை தெரசா**<br>**என் மனதில் நான் ஹிட்லர்”**<br>❖ இதற்குப் பிரபஞ்சன், “அவளிடமும் பல முகங்கள் தயாரான நிலையில் இருந்தன. என் முகத்தை அவளுமோ அவள் முகத்தை நானுமோ இன்றுவரை பார்த்ததில்லை.<br>❖ இவை போலிகள் என்று எங்கள் இருவருக்கும் தெரியும். வாய்விட்டுச் சொல்லிக்கொள்வதில்லை,” என்கிறார்.<br>❖ இந்த உண்மையைச் சந்திக்க நாம் எவ்வளவு வேதனைப்படவேண்டியிருக்கிறது!<br>அப்படியென்றால் மனிதனுக்கு உள்ள உண்மையான முகம் எது? | 1 | |
| | **சமாதியில் மனச்சாட்சி!**<br>**“ஊனடம்பு ஆலயம் உள்ளமே கடவுள்”**<br>❖ இதற்குப் பிரபஞ்சன், **“முகமே இல்லை!”** என்கிறார்.<br>இதன் பொருள்?<br>மனச்சாட்சியே இல்லை என்பதுதான்.<br>❖ அதனை அடித்து நொறுக்கி அழுத்திவிட்டுத்தான் மனிதன் ஆளுக்கேற்ப மாற்றிமாற்றி முகமூடிகளை அணிந்து கொண்டு தன்னையும் பிறரையும் ஏமாற்றிக்கொண்டிருக்கிறான்! | ½ | |

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| | **கதை உணர்த்தும் நீதி:**<br>"முகம் மாற்றி முகம் மாற்றி நம் உண்மை முகத்தையே இழந்து அடையாளமற்ற தன்மையில் காட்சியளிக்கிறோம்."<br>**முடிவுரை:**<br>இந்த உலகமே நாடக மேடை. அதில் அனைவரும் வெறும் நடிகர்களே. ஒவ்வொருவருக்கும் அறிமுகமும் முடிவும் உண்டு. ஒருவருக்கே பல வேடங்களும் உண்டு. பல முகங்களும் உண்டு. | ½ | |
| | **பகுதி - V**<br>**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** | | **4+2 = 6** |
| 47. | **அ) குறுந்தொகை**<br>அம்ம வாழி தோழி நம்மூர்ப்<br>பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ<br>தண்டுடைக் கையர் வெண்லைச் சிதவலர்<br>நன்றுநன் றென்னும் மாக்களோடு<br>இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.<br>**- வெள்ளிவீதியார்**<br>ஆ) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்<br>துணைவலியும் தூக்கிச் செயல்.<br><br>நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்<br>வாய்நாடி வாய்ப்பச் செயல்.<br>**(ஏதேனும் ஒரு குறள் எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்.)** | 4<br><br>2 | 6 |

**ஆக்கம்**
**தமிழ்த்துறை**
**ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,**
**சக்கராம்பாளையம்,அகரம் அஞ்சல், எலச்சிப்பாளையம்,**
**திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 637202.**
**CELL : 99655-31727, 94432-31727**




# ஸ்ரீ வித்யபாரதி

## மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி (TM/EM)

சக்கராம்பாளையம், எலச்சிபாளையம், திருச்செங்கோடு (வ), நாமக்கல் (மா) - 637 202.

செல்: 99655 31727, 94432 31727, 94422 88402, 99655 35967

www.shrividhyabharathi.com Email : vidhyabharathi.123@gmail.com

## 2021-2022 ஆம் ஆண்டில் MBBS கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள்



| MBBS | MBBS | MBBS | MBBS | MBBS | MBBS |
|---|---|---|---|---|---|
| R.KISHORE | VASANTHAKUMAR S | R.S.MIRUTHULA | M.HRISHRAJ | VARSHA S | ARUNKUMAR M |
| GOVT. MOHAN KUMARAMANGALAM MEDICAL COLLEGE, SALEM | GOVT. MOHAN KUMARAMANGALAM MEDICAL COLLEGE, SALEM | GOVT. MEDICAL COLLEGE, VELLORE | GOVT. MEDICAL COLLEGE, ARIYALUR | GOVT. MEDICAL COLLEGE, VILLUPURAM | GOVT. MEDICAL COLLEGE, VIRUDHUNAGAR |

L.K.G. முதல் +2 வரை 2023 - 2024 ஆம் கல்வியாண்டிற்கான அட்மிசன் முன்பதிவு நடைபெறுகிறது.

## 2021-2022 ஆம் ஆண்டில் ANNA UNIVERSITY & GOVT. ENGG. கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள்



| BE(AI & DS) | BE (EEE) | BE (EEE) | B.TECH (TEX.TECH.) | BE (CSE) | BE (B.TECH) | B.Tech (IT) | BE (ECE) |
|---|---|---|---|---|---|---|---|
| RAKSHITHA M | ABIRAMI G | RUTHISH K | ABISHECK V | ABIYA V | MATHUMIDA S | MOUNIKA T | PRAVEEN S |
| ANNA UNIVERSITY, (MIT CAMPUS) CHENNAI | ANNA UNIVERSITY (REGAL CAMPUS) COVAI | ANNA UNIVERSITY, CHITHAMBARAM | ANNA UNIVERSITY, ACT CAMPUS, CHENNAI | GOVT. COLLEGE OF ENGINEERING, KARUPPUR, SALEM | IRTT GOVERNMENT COLLEGE OF ENGINEERING, ERODE | IRTT GOVERNMENT COLLEGE OF ENGINEERING, ERODE | GOVT. COLLEGE OF ENGINEERING, TIRUNELVELI |

## 2021-2022 ஆம் ஆண்டில் C.A., B.Com., COURSE சேர்ந்த மாணவர்கள்




| CA FOUNDATION | CA FOUNDATION | B.COM | B.COM | B.COM | B.COM | B.COM | B.COM | B.COM |
|---|---|---|---|---|---|---|---|---|
| TAMIL BARATHI S | JAI ASWIN V C T | HARINIKA K G | MONIKA M S | KIRTHIGA P | SHOPIKA C | PREETHA R | KIRUTHIGA S | DHANUSUYA M |
| VS ACADEMY, COVAI | SHIRISTI ACADEMY, SALEM | KRISHNAMMAL ARTS AND SCIENCE COLLEGE, COVAI | AVINASHILINGAM UNIVERSITY, COVAI | VELLAM ARTS AND SCIENCE COLLEGE, THINDAL | KRISHNAMMAL ARTS AND SCIENCE COLLEGE, COVAI | VIVEKANANTHA ARTS AND SCIENCE COLLEGE, ELAYAMPALAYAM | VIVEKANANTHA ARTS AND SCIENCE COLLEGE, ELAYAMPALAYAM | VIVEKANANTHA ARTS AND SCIENCE COLLEGE, ELAYAMPALAYAM |



| B.COM | B.COM | B.COM | B.COM (PA) | B.COM | B.COM | B.COM (CA) | B.COM | B.COM (CA) | B.COM |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| SRIDHARANI A | SUJITHKUMAR V | KAVID S K | KUMARAN T | MANIKANDAN D | MONISH V B | RATHISH M T | GOPINATH R | SARAN K | SUDARSAN S M |
| ARTHANARIESWAR ARTS AND SCIENCE COLLEGE, TIRUCHENGODE | SRM UNIVERSITY, CHENNAI | KONGU ARTS AND SCIENCE COLLEGE, PERUNDURAI | KONGU ARTS AND SCIENCE COLLEGE, PERUNDURAI | SHRI RAMAKRISHNA ARTS AND SCIENCE COLLEGE, COVAI | RAMAKRISHNA ARTS AND SCIENCE COLLEGE, COVAI | KARPAGAM ARTS AND SCIENCE COLLEGE, COVAI | NPR ARTS AND SCIENCE COLLEGE, DINDIGAL | ST. JOSEPH ARTS AND SCIENCE COLLEGE, CHENNAI | SHRI RAMAKRISHNA ARTS AND SCIENCE COLLEGE, COVAI |

## 2021-2022 ஆம் ஆண்டில் JEE-MAIN தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவர்கள்



| 99% | 98% |
|---|---|
| REVANTH S | SHANMUGAKARTHICK G |

மாதத்தில் ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 10 மற்றும் 11- ஆம் வகுப்பு சேர்க்கைக்கான SCHOLARSHIP ENTRANCE EXAM நடைபெறும்

Time : 10.00am Onwards

Venue : SVB SCHOOL CAMPUS.